# Chapter – 4.4

# தொல்காப்பியம் – சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல்

## குறுவினாக்கள் – கூடுதல் வினாக்கள்

**Question 1.**
தொல்காப்பியம் குறித்துக் குறிப்பெழுதுக.

**Answer:**
தமிழ்மொழியில் கிடைத்துள்ள நூல்களில், காலத்தால் மிகமிகப் பழமையான இலக்கணநூல் தொல்காப்பியம். இது எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களையும், அதிகாரத்திற்கு ஒன்பது இயல்களாக இருபத்தேழு இயல்களையும் பெற்றுள்ளது. இதனை இயற்றியவர் தொல்காப்பியர்.

**Question 2.**
தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல், தெள்ளிதின் விளக்குவது யாது?

**Answer:**
நாட்டின் எதிர்காலமாக விளங்கும் பெருமை பொருந்திய மாணவர்கள், எவ்வாறு கற்க வேண்டும் என்பதனைத் தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல் தெள்ளிதின் விளக்குகிறது.

**Question 3.**
கற்றலில் சிறப்புற மாணவர் என்னென்ன செய்வர்? '

**Answer:**
கற்றலில் சிறப்புற மாணவர், ஆசிரியரிடம் உலகவழக்கு, நூல்வழக்கு இலக்கணங்களைக் குற்றம் நீங்கக் கற்பர்.

உயர்சிந்தனை உடையவர்களுடன் கலந்து உரையாடிப் பயிற்சியும் பெறுவர். தம் ஐயங்களை ஆசிரியர்களிடம் வினவித் தெளிவு பெற்று, அவற்றைப் பிறருக்கு உணர்த்தியும் தெளிவு அடையச் செய்வர்.

## சிறுவினா – கூடுதல் வினா

**Question 1.**
மாணவர் பாடம் கேட்கும் முறைமை குறித்துத் தொல்காப்பியம் கூறும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

**Answer:**
மாணவர் அறியாமை இருள் நீக்குநெறி :

- உலகவழக்கு, நூல்வழக்கு என்னும் மொழி வழக்கு இலக்கணங்களை அறிதல் வேண்டும்.
- பாடங்களைப் போற்றிக் கற்றல், கற்றலின்போது கேட்டவற்றை மீண்டும் நினைத்தல் வேண்டும்.
- ஆசிரியரை நெருங்கிப் பொருந்தி இருந்து, கருத்துகளைக் கேட்டுத் தெளிவு அடைதல் வேண்டும்.
- உயர்சிந்தனை உடையவர்களுடன் கலந்து, உரையாடிப் பயிற்சி பெறுதல் வேண்டும்.
- தங்களுக்கு ஏற்படும் ஐயங்களை வினாவாக எழுப்பித் தெளிவு பெறுதல் வேண்டும்,
- அவ்வாறு உணர்ந்த கருத்துகளைப் பிறர்க்கு உணர்த்தித் தெளிவு பெறச்செய்தல் வேண்டும்.
- இவையே, பாடம் கேட்கும் மாணவர் அறியாமையை நீக்கும் நெறிமுறைகளாகும்.

**பாடம் கேட்கும் முறை :**
பாடம் கேட்கும்போது, ஆசிரியர் கூறும் கருத்துகளை மாணவர்கள் ஒருமுறைக்கு இருமுறை கேட்டால், நூலைப் பிழையின்றிக் கற்கும் திறன் பெறுவர்; மும்முறை கேட்டால், பிறர்க்கு முறையாக எடுத்து உரைக்கும் ஆற்றலையும் பெறுவர்.

பாடம் கேட்டலைக் கடமையாகக் கொண்ட மாணவர்கள், இந்நெறிகளைக் கடைப்பிடித்தால், அறியாமையிலிருந்து விலகிச் சிறப்புறுவர் எனத் தொல்காப்பியச் சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல் உணர்த்துகிறது.

## இலக்கணக்குறிப்பு

அறிதல், போற்றல், நினைத்தல், கேட்டல், பயிறல், வினாதல், விடுத்தல் – தொழிற்பெயர்கள்
நனிஇகக்கும் – உரிச்சொற்றொடர்
இகக்கும், உரைக்கும் – செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுகள்.
கேட்போன் – வினையாலணையும் பெயர்.

## உறுப்பிலக்கணம்

**1. விடுத்தல் – விடு + த் + தல்**
விடு – பகுதி, த் – சந்தி, தல் – தொழிற்பெயர் விகுதி.

**2. அறிந்து – அறி + த் (ந்) + த் + உ**
அறி – பகுதி, த் – சந்தி, 'ந்' ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை,
உ – வினையெச்ச விகுதி.

**3. கேட்டல் – கேள் (ட்) + ட் + அல்.**
கேள் – பகுதி, 'ள்', 'ட்' ஆனது விகாரம், ட் – சந்தி, அல் – தொழிற்பெயர் விகுதி.

## புணர்ச்சி விதிகள்

**1. இழுக்கின்றி – இழுக்கு + இன்றி**
"உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்" (இழுக்க் + இன்றி)
"உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே" (இழுக்கின்றி)

**2. முறையறிந்து – முறை + அறிந்து**
“இ ஈ ஐ வழி யவ்வும்” (முறை + ய் + அறிந்து)
“உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே” (முறையறிந்து)

**3. ஆசாற்சார்ந்து – ஆசான் + சார்ந்து**
“ணனவல் லினம்வர டறவும்” (ஆசாற்சார்ந்து)

## பலவுள் தெரிக

**Question 1.**
தொல்காப்பியத்திலுள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை........
அ) 9
ஆ) 3
இ) 27
ஈ) 2

**Answer:**
இ) 27

## கூடுதல் வினாக்கள்

**Question 2.**
தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர்கள்...........
அ) இளம்பூரணர், பரிமேலழகர்
ஆ) இளம்பூரணர், சேனாவரையர்
இ) மணக்குடவர், சேனாவரையர்
ஈ) நச்சினார்க்கினியர், பரிமேலழகர்

**Answer:**
ஆ) இளம்பூரணர், சேன வரையர்

**Question 3.**
தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள அதிகாரங்கள் ............
அ) ஐந்து
ஆ) இரண்டு

இ) நான்கு
ஈ) மூன்று

**Answer:**
ஈ) மூன்று

**Question 4.**
தொல்காப்பியத்தின் ஒவ்வோர் அதிகாரமும், ………………
இயல்களைக் கொண்டுள்ளது.
அ) மூன்று
ஆ) எட்டு
இ) ஒன்பது
ஈ) பத்து

**Answer:**
இ) ஒன்பது

**Question 5.**
தொல்காப்பியத்தில் வாழ்வியல் இலக்கணம் கூறுவது
அ) எழுத்ததிகாரம்
ஆ) சொல்லதிகாரம்
இ) பொருளதிகாரம்
ஈ) யாப்பதிகாரம்

**Answer:**
இ) பொருளதிகாரம்

**Question 6.**
தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதியவர்…………….
அ) கல்லாடனார்
ஆ) பேராசிரியர்
இ) சேனாவரையர்
ஈ) இளம்பூரணர்

**Answer:**
ஈ) இளம்பூரணர்

**Question 7.**
‘கடனாக் கொளினே மடம்நனி இகக்கும்’ – இத்தொடரில் ‘கடமை’ என்னும் பொருளுணர்த்தும் சொல் ……………………………
அ) கொளின்
ஆ) மடம்
இ) கடன்
ஈ) இகக்கும்

**Answer:**
இ) கடன்

**Question 8.**
முறையறிந்து உரைக்கும் ஆற்றல் பெற,………… வேண்டும்.
அ) ஒருமுறை கேட்க
ஆ) இருமுறை கேட்க
இ) மும்முறை கேட்க
ஈ) நான்குமுறை கேட்க

**Answer:**
இ) மும்முறை கேட்க

**Question 9.**
“முக்காற் கேட்பின் முறையறிந்து உரைக்கும்” என்னும் தொல்காப்பிய நூற்பா இடம்பெற்ற பகுதி,………………
அ) பொதுப் பாயிரம்
ஆ) சிறப்புப் பாயிரம்
இ) எழுத்ததிகாரம்
ஈ) சொல்லதிகாரம்

**Answer:**
ஆ) சிறப்புப் பாயிரம்

**Question 10.**
பொருத்துக.
1. இழுக்கு – அ. நீக்கும்
2. மடம் – ஆ. சிறப்பு
3. மாண்பு – இ. மனக்கலக்கம்
4. இகக்கும் – ஈ. அறிவின்மை
– உ. குற்றம்

**Answer:**
1 – உ
2 – ஈ
3 – ஆ
4 – அ